செ.வெ.எண்.62 நாள்.23.09.2017

# பத்திரிகைச் செய்தி

## வரைவு

## திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்திற்கான செய்தி வெளியீடு

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வேளாண்மை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் நடப்பு 2017-18 நிதியாண்டில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.

தமிழக அரசின் 2017-18 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் வேளாண் இயந்திரமயமாக்கலுக்காக ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அதில் ரூ.30 கோடி தனிப்பட்ட விவசாயிகள் மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிடவும், 590 எண்கள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைத்திடவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் 8 குதிரை திறன் முதல் 70 குதிரைத் திறன் வரை சக்தி கொண்ட டிராக்டர்கள், பவர்டில்லர், நெல் நடவு இயந்திரம், வைக்கோல் கட்டும் கருவி, சுழல் கலப்பை, விசைக் களையெடுப்பான், விதைக்கும் கருவி, வரப்பு அமைக்கும் கருவி, தட்டு வெட்டும் கருவி, டிராக்டரில் இயங்கும் தெளிப்பான முதலான வேளாண் இயந்திரங்களும் கருவிகளும் வாங்கிக் கொள்ள விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது.

### மானிய உதவி

இத்திட்டத்தில் சிறு, குறு, ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் வரையும், இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் வரையுமான தொகை அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிக பட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

மானியத்திற்கு தகுதியாக்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விவரம், அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்களின் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விலைப் பட்டியல்கள், மானிய விவரங்கள் ஆகியவை இம்மாவட்டத்தின் கீழ்கண்ட அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மானிய உதவியுடன் கருவிகளை வாங்க விரும்பும் விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறையில் உரிய நில உரிமை ஆவணங்கள், சிறு அல்லது குறு விவசாயி சான்று, ஆதார் போன்ற அடையாள ஆவணங்களுடன் விண்ணப்பித்து, மூதுரிமைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இத்திட்டத்திற்கு திருநெல்வேலி, மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.61.50 இலட்சம் மானியத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வேளாண் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள்

மேலும் சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிக விலையுள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சொந்தமாக பெற்றுக் கொள்ள இயலாததை கருத்தில் கொண்டு அவற்றை குறைந்த வாடகையில் பெற்றிட ஏதுவாக வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைக்கவும் மானிய உதவி வழங்கப்படுகிறது.

இதன்படி வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைக்க விரும்பும் குழுக்களோ அல்லது தொழில் முனைவோரோ, ரூ.25 இலட்சம் மதிப்புடைய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்கி வாடகை மையங்கள் அமைக்க முன் வந்தால் அவர்களுக்கு 40 சதவிகித மானிய அடிப்படையில் அதிக பட்சமாக ரூ.10 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும்.

நடப்பு நிதி ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரூ.30.00 இலட்சம் மானியத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையம்

பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் உபயோகம் குறைவாக உள்ள கிராமங்களில், கிராம அளவிலான குழுக்கள் ரூ.10 இலட்சத்திற்கு குறையாத மதிப்புரைய பண்ணை இயந்திரங்களை வாங்கி, வாடகை மையங்கள் நடத்தலாம். இதனை விவசாயக் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் போன்றவை மேற்கொள்ளலாம். நடப்பாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் நீடித்த புஞ்சை நில சாகுபடிக்கான திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள குழுக்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட திட்டங்களில் பயனடைய விரும்பும் விவசாயிகள், விவசாய குழுக்கள், தொழில் முனைவோர், மாவட்ட செயற் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அல்லது சம்மந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்திலிருந்து விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் பாஸ்போர்ட் அளவு 2 புகைப்படம், ஆதார் அட்டை நகல், சிட்டா அடங்கல் நகல், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று, ஜாதிச் சான்று நகல், டிராக்டரில் இணைத்து இயக்கக் கூடிய கருவியாக இருந்தால் டிராக்டரின் பதிவுச் சான்று நகல், வங்கிக் கணக்குப் புத்தகத்தின் முதல் பக்க நகல் போன்றவற்றினை இணைத்து வழங்க வேண்டும். விண்ணப்பங்கள் மூதுரிமை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் கருவிகள் வாங்க அனுமதி வழங்கப்பட்டு பின்னர் மானியம் வழங்கப்படும். விவசாயிகள் தாங்கள் விரும்பும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கான முழுத் தொகையையும் வங்கி கேட்பு வரைவோலை மூலமாக உரிய உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கிட வேண்டும்.

வேளாண் இயந்திரங்கள், கருவிகளை விவசாயிகள் பெற்ற பின்னர் அதனை வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் பார்வையிட்டு உறுதி செய்த பின்னர் அதற்குரிய மானியத் தொகையை சம்மந்தப்பட்ட பயனாளி விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு தனிப்பட்ட இயந்திரங்கள் வாங்கிக் கொள்ள நடப்பாண்டில் ரூ.61.50 இலட்சங்களும், வாடகை மையங்கள் அமைக்க ரூ.62.00 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மானிய விலையில் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பெற விரும்பும் விவசாயிகள் உடனடியாக வேளாண்மைப் பொறியியல் துறையில் பதிவு செய்து, பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

.2017

செயற் பொறியாளர் (வே.பொ),
திருநெல்வேலி.

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்

திருநெல்வேலி